(க) 2019 இன் எரிபொருள் செலவானது ரூபா.28,171,284/- ஆக இருந்துள்ளது. அந்தச் செலவானது சரியாகக் கணக்கிடப்பட்டு, அந்தப் பணம் தொடர்பான அனைத்து கட்டண வவுச்சர்களும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பணம் செலுத்துவதற்கான அனுமதியை வழங்கும் ஆவணங்களுடன் துணை ஆவணங்களும் வவுச்சர்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன. எரிபொருள் செலவினம் தயாரிக்கப்பட்ட முறை பற்றிய சுருக்கமான ஆவணம் இணைப்பு-04 என கணக்காய்வுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ளது.

(கா) கணினிமயமாக்கப்பட்ட கணக்கியல் முறைமையில் சேர்க்கப்பட்டுள்ள வரி விலைப்பட்டியல்களின்படி, 2019 இன் வாடகை வருமர்னமானது ரூபா. 254,268,885/- ஆக இருந்துள்ளது.

(கி) கூ.மொ.தா ஆனது காசோலைகள் மற்றும் வாடகைப் பணத்தினை வைப்புச் செய்வதற்கு கொமர்ஷல் வங்கியின் 1415160707 என்ற கணக்கைப் பயன்படுத்தியுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா.8,684,772/- தொகையான அடையாளம் தெரியாத வைப்புத் தொகையானது மேற்குறித்த கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. அந்தத் தொகை வர்த்தக வருவாயாகப் பெறப்பட்ட பணம் அல்ல என்பதாலும், முந்தைய ஆண்டுகளின் கடனாளிகளிடமிருந்து நிலுவையில் உள்ள கடன் நிலுவைத் தொகை என்பதாலும், இந்தத் தொகை கடனாளிகளின் வாடகை நிலுவையிலிருந்து நீக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

(கீ) ரூபா. 21,952,060/- மீதியாக உருவாக்கப்பட்ட பேரேட்டுக் கணக்குகள். நிதிநிலை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கணக்குகள் சேர்க்கப்பட்டுள்ள கணக்குகளின் குறிப்பு இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

i. **CWE Construction & Engineering - Rs. 19,623,810**
   **Note No : - 32-2 , Under Related Party Transactions**

ii. **Ministry Of Industry - Rs. 1,823,176**
   **Note No : 17-5-1 , Under Other Receivables , Current Balances**

iii. **Ministry of National Blisses & Economics – Rs. 140,000**
   **Note No : 17-5-1 , Under Other Receivables , Current Balances**

iv. **Unido EO Trade Realated Assistance – Rs. 365,074**

(கு) லங்கா சதொச நிறுவனத்திற்கு நிலுவை உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்ட போதிலும், அது தாபனத்திற்கு பதிலளிக்கவில்லை. (இணைப்பு - 05). எனவே, மீதியினை உறுதி செய்ய இயலாதுள்ளது. அடுத்த நிதியாண்டில் இருப்பு உறுதிகளைப் பெற்று ஒப்பிட்டுப் பார்க்க நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

(கூ) சதோச நிருமாண மற்றும் பொறியியல் நிறுவனத்திடமிருந்து 2019.12.11 இல் பெற வேண்டிய வாடகையான ரூபா.19,623,810/- நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே தொகையானது 2019 ஆம் ஆண்டுக்கான பேரேட்டுக் கணக்குகளிலும் காட்டப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டுக்கான சதொச பொறியியல் நிறுவனத்திடமிருந்து செலுத்த வேண்டிய வாடகை, மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்களை மீளச் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல் பெறுமதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே, இந்த மீதியானது துல்லியமாக கணக்கிடப்பட்டுள்ளது.

(கெ) ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானங்கள்,

(i) சதொச நிருமாண நிறுவனம் தனது நிதிக் கூற்றினைத் தயாரித்து கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி அரசாங்க கணக்காய்வு திணைக்களத்திடம் சமர்ப்பித்துள்ளது. அதன்படி, 2019.12.31 ஆம் திகதியன்று தயாரிக்கப்பட்ட நிதி வெளிப்படுத்துகை தொடர்பான பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த கணக்குகளைத் தயாரிக்குமாறு தாபனத்திற்கு உத்தரவிட்டுள்ளனர். பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களும் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, 2019 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த கணக்குகளுக்காக சதொச நிருமாண நிறுவனம் சமர்ப்பித்த கணக்குகளுக்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அங்கீகாரத்தினை தங்களுக்கு அனுப்பி வைக்குமாறு நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இணைப்பு - 06).

பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நிதிநிலை அறிக்கைகளை சதொச பாதுகாப்பு சேவைகள் கம்பனியிடம் சமர்ப்பிக்குமாறு கூட்டுத்தாபனத்தினால் அறிவிக்கப்பட்ட கடிதத்தின் (இணைப்பு - 07) பிரகாரம் கணக்காய்வுக்கு நான் குறிப்பிடுகின்றேன். ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்காக அவர்களின் சொந்த நிதிக் கூற்றுக்கள் மட்டுமே அந்த நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்பதையும், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக அவர்கள் எங்களுக்குப் பரிந்துரைக்கவில்லை என்பதையும் நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(ii) சதொச பாதுகாப்பு சேவைகள் நிறுவனத்திடம் இந்த வருமான தேக்கம் குறித்து விளக்கம் கோரப்பட்டது. இதுவரை சரியான தகவல்கள் எதுவும் வழங்கப்படவில்லை. முந்தைய ஆண்டுகளின் இந்த மீதி, ஒருங்கிணைந்த கணக்குகளில் தக்க வைக்கப்பட்ட வருமானத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

(iii) கணக்கீட்டு நியமங்களின்படி பணிக்கொடை ஒதுக்கீடுகள் நடைமுறை அல்லாத பொறுப்பாகும். இந்த மதிப்பானது, அடுத்த 05 ஆண்டுகளுக்கு கருணைத் தொகையாக வழங்கப்படும் எதிர்பார்க்கப்படும் பெறுமதியன இலாபத்தில் இருந்து ஒதுக்கப்பட்டதாகும். அதன்படி, இது நீண்ட கால பொறுப்பு என்பதால், நடைமுறை அல்லாத பொறுப்பு. நிர்வகிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களில் இது

தவறாகக் காட்டப்பட்டாலும், ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளில் தவறானது அங்கீகரிக்கப்பட்டு, கணக்கீட்டு நியமங்களின்படி கணக்குகளில் சரியாகப் பிரதிபலிக்கின்றது.

(iv) தாபனத்தின் வருமானத்திற்கும், நிருவாக நிறுவனங்களின் நுகர்வுக்கும் உள்ள வித்தியாசத்தை நாங்கள் அவதானித்து, 31.12.2019 அன்று நிருவாக நிறுவனங்களுக்கு நிலுவை தொகையை உறுதி செய்து கடிதம் அனுப்பியும், அவர்கள் தாபனத்துக்கு பதில் அனுப்பவில்லை. (இணைப்பு - 08.) எதிர்காலத்தில் வேறுபாட்டைக் கண்டறிந்து சமநிலையை ஒப்பிட்டுப் பார்க்கவுள்ளேன்.

(கே) இந்த நிலுவைகளில், 2017-2019 ஆம் ஆண்டுகளில் அரிசி கொள்வனவு செய்வதற்கு கொள்வனவாளர்கள் அதிகளவு செலுத்திய நிலுவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. நிலுவை தொகையை வருமானமாகக் கண்டறிந்து ஒதுக்கி, எதிர்கால நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்குத் தேவையான ஒப்புதல்களைப் பெறவுள்ளேன்.
இதற்கிடையில், நீண்ட கால நிலுவைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான ஆதார ஆவணங்கள் நிதித் துறையிடம் இல்லை, மீதியாயுள்ள நிலுவைகளை எதிர்கால கணக்குகளில் சரியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

### 1.1.2 கணக்காய்வுக்கான போதிய ஆதாரமின்மை

**(i) வழக்கு மூலம் செலுத்த வேண்டிய தொகை - ரூ.25,900,236**

2017 ஆம் ஆண்டு நிதிக் கூற்று கணக்காய்வின் போது இது தொடர்பான கணக்கீடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்பதற்கான ஆவணங்கள் கணக்காய்வுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன. நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவானது அளித்த அறிக்கையின்படி, அரிசிக் கருத்திட்டத்தில் காணாமல் போன அரிசி மூடைகளின் எண்ணிக்கை குறித்து தாபனத்தின் பொது முகாமையாளர் எழுத்து பூர்வமாக அளித்த அறிவிப்பின்படி நாங்கள் கணிப்பிட்ட செலவின்படி இந்த விடுபட்ட பெறுமதியானது கணக்கில் காட்டப்பட்டுள்ளது. தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இதற்கான வழக்கு நிலுவையில் இருப்பதால், இந்த மதிப்பீட்டு அறிக்கைகள் ஒரு வழக்கின் நிலுவைகளாகக் காட்டப்பட்டுள்ளன.

**(ii) திறைசேரிக்கு செலுத்த வேண்டிய நிலுவைகள்.**

**- கடன் தீர்ப்பனவு - 98,718,402**

இது தொடர்பில் மக்கள் வங்கியிடம் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் கோரப்பட்டது, உறுதிப்படுத்தல் கிடைத்தவுடன் அதனை கணக்காய்வுக்கு அனுப்பி வைக்கவுள்ளேன்.

**- கடன் மறுசீரமைப்பு - 275,000,000**

2006 ஆம் ஆண்டு திறைசேரியால் வியாபாரப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.275,000,000/- , 2008 ஆம் ஆண்டிலிருந்து மறுசீரமைப்பு மீதிகளின் கீழ் நம்பிக்கப் பொறுப்பாளர் பெறுகை கடனாக (TR கடன்) கணக்கிடப்பட்டுள்ளது - மக்கள் வங்கி.

2016 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில், கணக்கியல் குறைபாடுகளின் கீழ், இந்த தொகையை திருப்பிச் செலுத்த வேண்டிய கடனாகக் கணக்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 2017 ஆம் ஆண்டு கணக்குகளை முன்வைத்ததில், 2016 ஆம் ஆண்டு கணக்கை சரியாக சரி செய்து கணக்காய்வுக்கு அனுப்பி வைத்துள்ளோம். 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சதொச நிதிப் பிரிவிடம் இல்லை என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- **SRL** **- கடன் கொடுத்தோர் -ரூபா. 655,000,000.00**
  **- வங்கி வசதிகள் - ரூபா..225,000,000.00**
  **- பெற்ற விற்பனைகள் - ரூபா. 680,000,000.00**

சதொச சில்லறை லிமிடெட் 2003 இல் கலைக்கப்பட்டதுடன் இந்த நிலுவைகள் 2003 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 18 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட இந்த பரிவர்த்தனைகளின் பெறுமதியை உறுதி செய்வதற்காக, நிதிப் பிரிவு வைத்திருக்கும் ஆவணங்களை இணைப்பு 09 ஆக இதன் மூலம் சமர்ப்பிக்கிறேன்.

- **SRL மீது - ரூபா. 200,000,000.00**

சதொச சில்லறை லிமிடெட் 2003 இல் கலைக்கப்பட்டதுடன் இந்த நிலுவைகள் 2003 முதல் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 18 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட இந்த பரிவர்த்தனைகளின் மதிப்பை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- **நெல் கருத்திட்டம் மீது - ரூபா. 254,149,693.00**

இந்த மீதியானது, சதொச சில்லறை விற்பனைக் கம்பனியால், நிறுவனம் கலைக்கப்படும் போது, நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு செலுத்த வேண்டிய மீதித் தொகையாகும் என்பதுடன் 2003 ஆம் ஆண்டு அந்த மீதிக்கான திறைசேரிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டு திறைசேரியானது இந்த பரிவர்த்தனைகளின் மதிப்பை உறுதிப்படுத்த நிதிப் பிரிவில் ஆவணங்கள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


- **SRL மீது - ரூபா. 200,000,000.00**

சதொச சில்லறை லிமிடெட் 2003 இல் கலைக்கப்பட்டதுடன் இந்த நிலுவைகள் 2003 முதல் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 18 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட இந்த பரிவர்த்தனைகளின் மதிப்பை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- **நெல் கருத்திட்டம் மீது - ரூபா. 254,149,693.00**

இந்த மீதியானது, சதொச சில்லறை விற்பனைக் கம்பனியால், நிறுவனம் கலைக்கப்படும் போது, நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு செலுத்த வேண்டிய மீதித் தொகையாகும் என்பதுடன் 2003 ஆம் ஆண்டு அந்த மீதிக்கான திறைசேரிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டு திறைசேரியானது இந்த பரிவர்த்தனைகளின் மதிப்பை உறுதிப்படுத்த நிதிப் பிரிவில் ஆவணங்கள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


**(iii) நீண்ட கால நிலுவையில் உள்ள வர்த்தக கடனாளிகளின் மீதி - ரூ. 6,214,481**

இந்த மீதியானது 14 நீண்ட கால கடன் பட்டோர் மீதிகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டது. இந்த ஐந்தொகையில் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கும் கணக்குகளுக்கான குறிப்புகளாக கணக்காய்வுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இந்த பேரேட்டு கணக்குகள் ஒவ்வொன்றும் 2011 ஆம் ஆண்டுக்கு முன்பே முன்வருகின்றன, மேலும் அந்த ஆவணங்கள் தொடர்பான தகவல்கள் தற்போது நிதிப் பிரிவில் காணப்படவில்லை. எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை பதிவளிப்பு செய்யும் குழுவிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

**(iv) நீண்ட கால நிலுவையில் உள்ள வர்த்தக கடனைபட்டோர்களின் மீதி குறைபாடு - ரூ. 6,214,481/-**

இந்த நிலுவைகள் குறைபாட்டிற்கான அங்கீகாரத்துக்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து, சம்மந்தப்பட்ட பிரிவினரிடம் விசாரித்து, அனுமதி கிடைத்திருந்தால் கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் (இணைப்பு -10)

**(v) ஏனைய கடன்ன் பட்டோர்களின் நீண்ட கால நிலுவைத் தொகைகள் - ரூ. 170,370,348/-.**

இந்த இருப்பு உருவாக்கப்பட்டுள்ள லெட்ஜர் கணக்கு நிலுவைகள் பற்றிய தகவல்கள் கணக்குகளுக்கான குறிப்புகளாக கணக்காய்வுக்கு குறிப்பிடப்படுகின்றன. இந்த நிலுவைகள் 2011 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே கண்க்குகளில் இருந்ததால், 2011 ஆம் ஆண்டுக்கான பேரேட்டு கணக்கு நிலுவைகள் மட்டுமே நெருக்கடியான முறைமையில் உள்ளிடப்பட்டுள்ளதால், நாங்கள் தற்போது கணக்கு வேலைகளைச் செய்து வருகிறோம்.

2011-ம் ஆண்டு முதல் நீண்ட காலமாக கணக்குகளில் மாற்றம் இல்லாமல் இந்த கணக்கு நிலுவைகள் காணப்படுவதால், அவற்றை கணக்குகளில் இருந்து கழிக்க தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறேன். அந்த நிலுவைகளை நிரூபிப்பதற்கான சான்று ஆவணங்கள் கணக்குகள் பிரிவில் இல்லாததால், அவற்றை திரும்பப் பெற முடியாது. எனவே, கணக்கீட்டு நியம இல. 36 இன்படி குறைபாட்டிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வருங்காலங்களில் நிலுவையில் உள்ள நிலுவைகளை தள்ளுபடி செய்யும் குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்.

**(vi) நீண்ட கால நிலுவையில் உள்ள ஏனைய கடன் பட்டோர்களின் நிலுவைகள் - குறைபாடு - ரூ. 170,370,348/-**

இந்த நிலுவைகள் குறைபாட்டிற்கான அங்கீகாரத்துக்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் விசாரிப்பேன். அங்கீகாரம் ஏற்கனவே கிடைத்திருந்தால், அதனை கணக்காய்வுப் பிரிவுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். (இணைப்பு – 10)

**(vii) ஏனைய கடன்பட்டோர்கள் - GmataSaviya கருத்திட்டம் -ரூபா. 42,568,994/-**

இந்த மீதி ஏற்பட்டுள்ள பேரேட்டு கணக்கு நிலுவைகள் பற்றிய தகவல்கள் கணக்குகளுக்கான குறிப்புகளாக கணக்காய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த திட்டம் 2014/2015 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பான விலைப்பட்டியல் மற்றும் ரசீதுகள் அந்த ஆண்டுகளின் கணக்காய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் நிதிப் பிரிவின் களஞ்சியங்களில் உள்ளதா என்பதைச் சரிபார்த்து, அவற்றைச் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்வேன்.

**(viii) நீண்ட கால நிலுவையில் உள்ள வாடகைக் கடன் பட்டோர்கள் -ரூ. 88,071,071/-**

இந்த மீதி ஏற்பட்டுள்ள பேரேட்டு கணக்கு நிலுவைகள் பற்றிய தகவல்கள் கணக்குகளுக்கான குறிப்புகளாக கணக்காய்வுக்கு குறிப்பீடு செய்யப்படுகின்றன. இந்த நிலுவைகள் 2011 இற்கு முந்தைய கணக்குகளில்

கொடுக்கப்பட்டுள்ளன, மேலும் 2011 ஆம் ஆண்டிலிருந்து பேரேட்டு கணக்கு நிலுவைகள் மட்டுமே தற்போது நாம் கணக்கீட்டுக்குப் பயன்படுத்தும் நெருக்கஇ முறைமையில் உள்ளிடப்பட்டுள்ளதால், முந்தைய ஆண்டுகளின் பேரேட்டு கணக்குகளைச் சரிபார்க்க முடியாது.

2011 ஆம் ஆண்டிலிருந்து மாற்றமில்லாமல் இருக்கும் கணக்கு நிலுவைகள் நீண்ட காலமாக கணக்குகளில் இருப்பதால், அவற்றை கணக்குகளில் இருந்து கழிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன். நிலுவைகளை நிரூபிப்பதற்கான சான்று ஆவணங்கள் கணக்குப் பிரிவில் இல்லாததால், அவற்றை மீட்பது சாத்தியமில்லை. எனவே, கணக்கீட்டு நியமம் 36 இன்படி குறைபாட்டிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(ix) தொடர்புடைய தரப்பினரிடமிருந்து நிலுவைத் தொகைகள்**

***- சதொச சில்லறை லிமிடெட் - ரூ. 110,878,720/-***

மேற்படி நிறுவனம் 2003 இல் இருந்து கலைக்கப்பட்டதுடன் CWE ஆனது, இதற்காக 2013 இல் ரூபா.42,623,064.07 இனை மட்டுமே பெற்றிருந்தது. மீதித் தொகையான ரூ.110,878,720/- திரும்பப் பெற இயலாது என்பதால், அது தொடர்பான குறைபாடுகளுக்கான ஏற்பாடுகள் கணக்கீட்டு நியமம் 36 இன்படி செய்யப்பட்டுள்ளன. 2003 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் தொடர்பான ஆவணங்கள் CWE நிதிப் பிரிவில் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் இதனை பெறுமதியினை பதிவளிப்பு செய்யும் குழுவிடம் தெரிவித்து அதை கணக்குகளில் இருந்து நீக்க நடவடிக்கை எடுப்பேன்.

***– லங்கா சதொச லிமிடெட் –ரூ. 24,202,985/-***

துணை நிறுவனங்களின் நடப்புக் கணக்கு நிலுவையின் கீழ் லங்கா சதொச லிமிடெட் நிறுவனத்திடம் இருந்து செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையாக 2010 நிதிக் கூற்றுக்களில் இந்த நிலுவை குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தற்போது கணக்கீட்டுக்குப் பயன்படுத்தப்படும் 'நெருக்கடி முறைமையில் 2011 ஆம் ஆண்டுக்கான பேரேட்டு கணக்கு நிலுவைகள் மட்டுமே உள்ளிடப்பட்டுள்ளன, நிதிப் பிரிவில் முந்தைய ஆண்டுகளின் பேரெட்டுக் கணக்குகள் காணப்படாமையால் அவற்றைச் சரிபார்க்க முடியாது. எனவே, இந்த மீதித் தொகை தயாரிக்கப்பட்ட விதம் குறித்து பதிலளிக்க நிதிப் பிரிவிடம் போதுமான ஆதாரம் இல்லை. எதிர்காலத்தில் இந்த பெறுமதியினை பதிவளிப்பு செய்யும் குழுவிடம் தெரிவிக்கவும், கணக்குகளில் இருந்து அவற்றினை நீக்குவதற்கும்நடவடிக்கை எடுப்பேன்.

**(x) நிலுவையில் உள்ள சட்டப்பூர்வ நிலுவைகள் –தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி- ரூ.234,321,615/-**

இது 2001 ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தாபனம் செலுத்திய தேசிய பாதுகாப்பு வரியின் மொத்தத் தொகையாகும். இந்த இருப்பு 2003 இல் இருந்து கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. இந்த வரி செலுத்தப்பட்ட தொகை எதிர்கால வரி பொறுப்புகளில் இருந்து கழிக்கப்படலாம் என்பதுடன் நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்து காட்டப்படும். எவ்வாறாயினும், எந்த வருடத்திலும் செலுத்தப்பட்ட வரியானது உரிய வரிக் கடனுக்கு எதிராக அமைக்கப்படவில்லை. இது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் வினவியபோது, செலுத்தப்பட்ட வரிப் பெறுமதியை நிர்ணயிக்க உரிய வரி ஆவணங்கள் கோரப்பட்ட போதிலும், அந்த ஆவணங்கள் கூ.மொ.தா. களுஞ்சியங்களில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான உண்மைகள் அடங்கிய கடிதங்களை இணைப்பு-11 ஆக கணக்காய்வுக்காக அனுப்பி வைக்கிறேன். இது தொடர்பாக நிதிப் பிரிவில் எந்த ஆவணமும் இல்லை.

## (xi) நீண்ட கால நிலுவையில் உள்ள கடன் பட்டோர்களின் மீதி ரூ. 3,519,166/-

இந்த மீதி தயார் செய்யப்பட்ட பேரேட்டுக் கணக்கு நிலுவைகள் பற்றிய தகவல்கள் கணக்குகளுக்கான குறிப்புகளாக கணக்காய்வுக்கு குறிப்பீடு செய்யப்படுகின்றன. இந்த நிலுவைகளுக்கான விலைப்பட்டியல் தொடர்பான எந்த ஆவணங்களும் நிறுவனத்திடம் இல்லை என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் இந்த மதிப்பை தள்ளுபடி செய்யும் குழுவிடம் தெரிவிக்கவும், கணக்குகளில் இருந்து அதனை பதிவளிப்புச் செய்யவும் நடவடிக்கை எடுப்பேன்.

## (xii) நீண்ட கால நிலுவையில் உள்ள கடன்பட்டோர்களின் மீதி -ரூ. 187,678,063/-

இந்த மீதி தயார் செய்யப்பட்ட பேரேட்டு கணக்கு நிலுவைகள் பற்றிய தகவல் கணக்குகளுக்கான குறிப்புகளாக கணக்காய்வுக்கு குறிப்பீடு செய்யப்படுகிறது. இந்த நிலுவைகள் 2011ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. கணக்குகள் பிரிவில் இதற்கான சான்று ஆவணங்கள் இல்லாததால், இந்த நிலுவைகளை பதிவளிப்புக் குழுவிடம் சமர்ப்பித்து கணக்கில் இருந்து தள்ளுபடி செய்ய ஏற்பாடு செய்வேன்.

## (xiii) நிலுவையில் உள்ள பெசேவ – ரூ.187,711,507/-

இந்த மீதியானது பின்வரும் கணக்கு நிலுவைகளின் மொத்தத்துடன் தயாரிக்கப்பட்டது.

பெசேவ கட்டுப்பாடு - 135,461,317.12

பெசேவ கட்டுப்பாடு – TP(2012) - 9,023,053.29

பெசேவ வெளியீடு - 43,227,135.88

இந்தக் கணக்கு நிலுவைகளில், பெசேவ கட்டுப்பாட்டு கணக்கில் 2019 ஆம் ஆண்டுக்கு செலுத்த வேண்டிய வரியின் பெறுமதி ரூ. 36,793,609.30. ஆகும். நிறுவனத்தால் வருமானமாகப் பெறப்பட்ட மொத்த பெறுமதியானது வருமானமாகப் பெறப்படாததால், தொடர்புடைய காலத்தில் பெறப்பட்ட உண்மையான வருமானத்திற்கு பெசேவ செலுத்துதல் வேண்டும். எனவே, இந்தக் கணக்கு 2019.01.01 இல் ரூபா.98,667,707.82 ஆரம்ப மீதியினைக் குறிப்பிடுகிறது. மேலும், inVAT கட்டுப்பாடு - TP(2012), பெசேவ வெளியீடு கணக்குகள் முந்தைய ஆண்டுகளின் வரிப் பொறுப்பைக் காட்டுகின்றன. இந்தக் கணக்கு நிலுவைகளின் மொத்தத் தொகையிலிருந்து ரூபா.187,711,507.00 மீதித் தொகை தயாரிக்கப்பட்டு தற்போது உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய தகவலின்படி பெசேவ செலுத்த சமரசம் செய்து வருவதுடன் அவர்களின் வருமானத்தின்படி 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை உரிய வரிகள் செலுத்தப்பட்டுள்ளன.. எனவே, 2019 ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகையை செலுத்துவதற்கான சமரசங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, துல்லியமான தகவலின்படி எதிர்கால கணக்கீடு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்
தொடர்புடைய வரிக் கோப்பு கணக்காய்வுக்காக இத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

## (xiv) வருமான வரி - ரூபா.91,035,989/-

இந்த மீதியானதுபின்வருமாறு கணிப்பீடு செய்யப்படுகின்றது.

| | வரவு | செலவு |
|---|---|---|
| Default Tax 1995 - 2009 | | 139,985,284 |
| ECS Charges | 37,957,954 | |

| | | |
|---|---|---|
| INCOME TAX PAYABLE | - | 7,389,359 |
| WHT – Output | 24,815,037 | - |
| WITH HOLDING TAX RECEIVABLE | 66,454 | - |
| WHT – Input | - | 6,500,790 |
| | 62,839,444 | 153,875,433 |
| 2019.12.31 ஆம் திகதியன்று செலுத்தத்தக்கவை | | 91,035,989 |

உரிய கோவையானது கணக்காய்வுக்காக இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. நடைமுறை வரிக் கணிப்பீடுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் இந்தக் கோவையில் உள்ளக்கப்பட்டுள்ளன..

(xv) **ஒதுக்கிய வரி செலவு - ரூபா. 70,797,624/-**

இந்த மீதி தோற்றுவிக்கப்பட்டமை தொடர்பான ஆவணங்கள் மற்றும் வரிக் கோவைகள் கணக்காய்வுக்காக குறித்துரைக்கப்படும்.

(xvi) **வைப்புக்களும் முற்பணங்களும்**

**நடைமுறை மீதி – ரூபா.12,582,644/-**

இந்த மீதியானது பின்வருமாறு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

- **வாடகை வைப்பு – ரூபா.1,000,000/-**

2016 ஆம் ஆண்டு Anwer Hardware நிறுவனத்திற்கு சதொச வழங்கிய வாடகை வைப்புத்தொகையாகும். இந்த தொகையானது 707613 எனும் இலக்கம் கொண்ட 2016.04.06 ஆம் திகதிய காசோலை மூலம் PM16/706/00063 ஆம் இலக்க வவுச்சரினூடாக மேற்கொள்ளப்பட்டது.
2016 இல், கணக்காய்வுப் பிரிவுக்கு தொடர்புடைய சான்று ஆவணங்கள் குறித்து குறித்துரைப்பேன்.

- **முற்பணம் - ரூ. 46,330/-**

அவசர பயணச் செலவுகள், சட்டச் செலவுகள், நலச் செலவுகள் போன்றவற்றுக்கு தலைமைச் செயலக ஊழியர்களுக்கு வழங்கப்படும் முற்பணம் இந்தக் கணக்கில் கணக்கிடப்படுகிறது. 2019.01.01 இன் தொடக்க இருப்பு ரூபா.130,980.00 ஆகும்.இந்த ஆண்டில் ஊழியர்களுக்கு

ரூபா.2,205,513.20 முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுப்பனவுகள் தணிக்கைக்காக சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவு வவுச்சர்களில் சேர்க்கப்பட்டுள்ளன. ரூபா. 2,290,163.20 இந்த ஆண்டில் பதவியினர்களால் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மேலும் செலுத்த வேண்டிய முற்பணம் ரூ.46,330 ஆகும்.

- **முற்பணம் (மற்றவை) - ரூ. 311,770.89**

இந்தக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா.32,000.00. ஆகும். இந்தப் பணம், நிறுவனத்தின் தினசரி பழுதுபார்ப்பு, விலைப்பட்டியல் சமர்பிக்காமல் அவசரகால கொள்முதல் போன்றவற்றுக்குப் பிரிவுத் தலைவர்களின் பரிந்துரையின் பேரில் பொது முகாமையாளரின் ஒப்புதலின் பேரில் ஊழியர்களுக்கு வழங்கப்படும் முன்பணமாகும். 2019 ஆம் ஆண்டில், ரூபா.117,431,838.19 முன்பணமாக வழங்கப்பட்டுள்ளதுடன் அனைத்து கொடுப்பனவு வவுச்சர்களும் கணக்காய்வு நோக்கங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டதால், இந்தக் கொடுப்பனவுகள் கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, 2019.12.31 இலுள்ளவாறான கணக்கு மீதி ரூபா.311,770.89 ஆகும்.

- **மீட்கக்கூடிய வைப்புத்தொகை (எரிபொருள்) - ரூ. 1,750,000/-**

சதொச போக்குவரத்து பிரிவின் லொறிகளுக்கு எரிபொருளை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் கூ.மொ.தா. இனால் மேற்கொள்ளப்பட்ட வைப்புத்தொகைகள் ஆகும் இந்த மீதியானது பின்வருமாறு உருவாக்கப்பட்டது.

சி.எஃப்.க்கு ரூபா.1,500,000/- செலுத்தப்பட்டுள்ளது. 2014.01.01 ஆம் திகதியிடப்பட்டதும் 636208 ஆம் இலக்கம் கொண்டதுமான காசோலை மூலம் De Mel & Sons (Pvt ) Ltd க்கு PM14/707/0001 ஆம் இலக்க வவுச்சர் மூலம் செலுத்தப்பட்டது.

2016.06.08 ஆம் திகதியன்று குருநாகல் நெல்சன் ஆட்டோ சர்வீசஸ் நிறுவனத்திற்கு PM16/706/00260 என்ற வவுச்சர் இலக்கத்தின் கீழ் காசோலை இலக்கம் 707835 மூலம் ரூ.250,000/- செலுத்தப்பட்டது.

- **மீட்கக்கூடிய கொள்கலன் வைப்பு -ரூ. 2,384,543.47**

2017/2018 இல் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை கொள்கலன்களுக்காக ஷிப்பிங் நிறுவனங்களுக்கு கூ.மொ.தா. செலுத்திய மீளளிக்கத்தக்க கொள்கலன் வைப்புத்தொகை இந்த இருப்பில் அடங்கும். குறித்த கொள்கலனை களஞ்சியசாலைக்கு எடுத்துச் சென்று கொள்கலனை கப்பல் கம்பனியின் கொள்கலன் களஞ்சியசாலையில் ஒப்படைத்து அறிக்கையை கப்பல் நிறுவனத்திடம் சமர்ப்பித்த பின்னர் கப்பல் நிறுவனம் வைப்புத் தொகையை சதொச நிறுவனத்திற்கு திருப்பி செலுத்தும். இவ்வாறு வைக்கப்பட்டுள்ள வைப்புக்கள் பற்றிய தகவல்கள் கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- **வாடகை வைப்புத்தொகை - ரூபா. 7,090,000/-**

இந்தக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா. 115,000.00. ஆகும். 2018 ஆம் ஆண்டில், இறக்குமதி செய்யப்பட்ட அரிசியைக் களஞ்சியப்படுத்துவதற்காக நிறுவனத்தால் பெறப்பட்ட பண்டகசாலைகளுக்கு திருப்பிச் செலுத்தப்படும் வைப்புத்தொகை முற்பணக் கணக்கில் பற்று வைக்கப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் வாடகை முற்பணக் கணக்கில் சரியாகப் பற்று வைக்கப்பட்டது. அதற்கிணங்க, 2019.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு, இந்தக் கணக்கின் மீதி இருந்துள்ளது.

- **நீண்ட கால இருப்பு ரூ.29,692,440/-**

இந்த ம்மீதித் தொகை உருவாக்கப்பட்ட பேரேட்டு கணக்கு நிலுவைகள் பற்றிய தகவல்கள் முந்தைய ஆண்டிலும் கணக்காய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலுவைகள் 2011 ஆம் ஆண்டுக்கு முந்தைய கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன, மேலும் 2011 ஆம் ஆண்டிலிருந்து பேரேட்டு கணக்கு நிலுவைகள் மட்டுமே தற்போது நாம் கணக்கீட்டுக்குப் பயன்படுத்தும் நெருக்கட்டியான முறைமையில் உள்ளிடப்பட்டுள்ளதால் முந்தைய ஆண்டுகளின் பேரேட்டுக் கணக்குகளை சரிபார்க்க இயலாது.

2011ஆம் ஆண்டிலிருந்து மாறாமல் இருக்கும் கணக்கு நிலுவைகள் நீண்ட காலமாக கணக்கில் இருப்பதால், அவற்றை கணக்குகளில் இருந்து தள்ளுபடி செய்ய ஏற்பாடு செய்வேன். கணக்குப் பிரிவில் அந்த நிலுவைகளை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் மற்றும் ஆவணங்கள் இல்லாததால், அவற்றை மீட்பது சாத்தியமில்லை என்பதுடன் குறைபாடுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**(xvii) மற்ற முதலீடுகள் – சதொச ரீடெய்ல் லிமிடெட் ரூ.171,928,690/-**

ஏனைய முதலீடுகள் - சதொச சில்லறை விற்பனை நிறுவனம - ரூ.171,928,690/-

இந்த நிலுவைகள் 2011 ஆம் ஆண்டுக்கு முந்தைய நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளன. இவற்றினை சான்றுப்படுத்தும் ஆவணங்கள் கணக்குப் பிரிவில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**xviii) 2019 ஜனவரி 01 இன் படி மீட்கக்கூடிய வட்டிக் கணக்கின் இருப்பு ரூ. 1,039,739/-**

இந்தக் கணக்கின் மீதி 2013 ஆம் ஆண்டின் கணக்குகளில் இருந்து வரும் மீதித்தொகையாகும். 2019 ஆம் ஆண்டுக்கான வட்டி ரசீது சரியாகச் சரிசெய்யப்பட்டது.

**(xix) சிறப்பு திட்டங்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைகள்**

**- கிரேட் செலுத்த வேண்டியவை - ரூ. 7,731,857**

இக் கருத்திட்டம், 2011 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, நிதிப் பிரிவில், இந்த ஆவணங்கள் இல்லை. தொடர்புடைய விலைப்பட்டியல்கள் மற்றும் ரசீதுகள் அந்த ஆண்டுகளின் கணக்காய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**- மில்கோ (பிரைவேட்) லிமிடெட் -ரூ. (453,497)**

இந்த கருத்திட்டம் 2016 - 2019 இல் செயற்படுத்தப்பட்டதுடன் அனைத்து ஆவணங்களும் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. தொடர்புடைய இன்வாய்ஸ்கள் மற்றும் ரசீதுகள் அந்த ஆண்டுகளின் கணக்காய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**- கூட்டுறவு வளர்ச்சித் துறை - ரூ. 19,926,051**

இந்த நிலுவை தொகையானது கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டு கூ.மொ.தா. க்கு வழங்கப்பட்ட கடனாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் இந்தக் கணக்கில் ரூபா.19,926,051.00 கடன் மீதி குறிப்பிடப்பட்டுள்ளது.

**- Millers செலுத்தத்தக்கவைகள் -ரூ. 47,753,691**

இந்த மீதியில் சேர்க்கப்பட்ட மீதிகளில் ரூபா. 16,500,960/= தி என்பது 2011 ஆம் ஆண்டுக்கு முன் வந்த மீதித்தொகையாகும். இந்த மீதி தொடர்பான சான்றுப்படுத்தும் ஆவணங்கள் எதுவும் இல்லாததால், அதனை பதிவழிக்கச் சமர்ப்பிக்கிறேன். மீதமுள்ள நிலுவைகள் 2011 முதல் 2017 வரையிலான பேரேட்டுக் கணக்குகளில் உள்ள நிலுவைகளாகும். நான் இந்த மீதிகளை தயார் செய்து 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் காட்டவுள்ளேன்.

**- பொதியிடல் பொருட்கள் - ரூ. 10,191,665**

இந்த கருத்திட்டம் 2011 இலிருந்து 2014 வரை செயற்படுத்தப்பட்டதுடன் சான்றுப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவில் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- போக்குவரத்து - ரூ. 5,275,761**

இந்த திட்டம் 2011 முதல் 2014 வரை செயற்படுத்தப்பட்டதுடன் சான்றுப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவில் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- திரும்பப் பெறும் வைப்புத்தொகை ரூ. 4,605,106**

இந்த திட்டம் 2011 இலிருந்து 2014 வரை செயற்படுத்தப்பட்டதுடன் சான்றுப்படுத்தும் ஆவணங்கள் நிதிப் பிரிவில் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- ஏனைய நெல் செயற்பாடுகள் - ரூ. 11,523,151**

இந்த திட்டம் 2011 முதல் 2014 வரை செயல்படுத்தப்பட்டது மற்றும் ஆதார ஆவணங்கள் நிதிப் பிரிவில் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- சோளக் கருத்திட்டம் - ரூ. 16,442,700**

இந்த திட்டம் 2016-2017 இல் செயல்படுத்தப்பட்டது. கூ.மொ.தா. ஆனது, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் நோக்கல்லையின் கீழ் தொழிற்பட்டு வருகின்றமையால் அமைச்சு 282,080,334.50 ரூபாயை செலுத்தியது. காசோலை மூலம் முறையே 49,072,860 மற்றும் 2016 மற்றும் 2017 இல் 282,080,334.50 ரூபாய் செலுத்தப்பட்டது. குறித்த காசோலையானது கொமர்ஷல் 709 கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு, அத்தொகையிலிருந்து சோளம் வழங்குனர்களுக்குரிய பணம் செலுத்தப்பட்டது. CIC கிரெய்ன் சமர்ப்பித்த ஆவணங்களில் மூலப் பிரதிகள் காணப்படாமையால், இந்தத் கருத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட கொடுப்பனவு அலுவலகத்தினால் கொடுப்பனவானது நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த கருத்திட்டம் தொடர்பான ஆவணங்கள் கணக்காய்வுப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும். (இணைப்பு – 12)

**- அரிசி ஏற்றுமதி திட்டம் - ரூ. 22,797,153**

இந்த திட்டம் 2013/2014 இல் செயw;படுத்தப்பட்டது.

குறிப்பு - -

2013.07.31 ஆம் திகதியன்று இரவு கூ.மொ.தா. தலைமைகத்தின் 07 ஆவது மாடியில் ஏற்பட்ட திடீர் தீயினால் கூ.மொ.தா. இன் பழைய ஆவணங்கள் பல எரிந்து நாசமாகின.

அதன் காரணமாக, இங்கு கூறப்பட்டுள்ள சில ஆவணங்களை (2013 இற்கு முந்திய காலப்பகுதியுடன் தொடர்புடையது) முன்வைக்க முடியாது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

### 1.4.1. பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை

(அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதிமுறைகளில்,

(i) நி.பி.387 இன் படி,

தாபனம் ஒருபோதும் வங்கியிடமிருந்து எந்தவொரு மேலதிகப் பற்று வசதிகளையும் கோரவில்லை அல்லது சமர்ப்பிக்கவில்லை. ரூபா. 6,538,568 தாபனத்தின் பணப் புத்தகத்தில் வங்கி மேலதிகப் பற்றாக காட்டப்பட்டுள்ள இருப்பு பின்வரும் வங்கிக் கணக்கு நிலுவைகளின் மொத்தத்திலிருந்து தயாரிக்கப்பட்டது.

கொமர்ஷல் வங்கி 701 – ரூபா. 5,052,648.96

டிப்போ வங்கி - ரூபா. 242,144.00

சம்பத் வங்கி - ரூபா. 1,243,775.00

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள டிப்போ வங்கி கணக்கு நிலுவைகள் 2007 முதல் தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் பிரதிபலிக்கின்றன, மேலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வங்கி மேலதிகப் பற்று மீதியான ரூபா.242,144.00 என்பது 2008 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்பட்ட ஒரு மீதி ஆகும். இந்த வங்கிக் கணக்கில் இருந்து 2007ஆம் ஆண்டுக்குப் பிறகு எந்தப் பரிவர்த்தனையும் செய்யப்படவில்லை என்று நிதிக் கூற்றுக்களைக் கவனித்ததில் இருந்து தெரிகிறது. எனவே, இந்த மீதி குறித்து சம்பந்தப்பட்ட வங்கியுடன் சரிபார்த்து, எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளேன்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சம்பத் வங்கிக் கணக்கு 2000 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே தாபனத்தின் பரிவர்த்தனைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது, மேலும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வங்கி மேலதிகப் பற்று மீதியான ரூ.1,243,775.00 இல், 2008 ஆம் ஆண்டு முதல் இந்த வங்கிக் கணக்கில் இருந்து எந்தப் பரிவர்த்தனையும் செய்யப்படவில்லை என்று நிதிக் கூற்றுக்களில் அவதானிக்க முடிந்துள்ளது.

கொமர்ஷல் வங்கி 701 கணக்கிற்காக வங்கியால் பெறப்பட்ட மீதிச் சான்றிதழின் படி, 2019.12.31 இலுள்ளவாறான கணக்கின் மொத்த மீதி ரூபா.97,750.00 ஆகும். (இணைப்பு - 13) 2019.12.31 இல் நிலுவையில் உள்ள காசோலைகளின் பெறுமதி ரூபா.5,070,727.46 ஆகும் (இணைப்பு - 14) அதற்கிணங்க,, அந்த காசோலைகளின் பணம் மற்றும் பணப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள ரசீதுகள் வழங்குனர்களுக்கு பணம் செலுத்துவதில் சேர்க்கப்படவில்லை. 2019.12.31 வரையிலான கணக்கு ஆண்டு தொடர்பான கொடுப்பனவுகள் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதால், அந்த கொடுப்பனவுகள் அனைத்தும் 2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன, மேலும் கணக்கில் பணம் இல்லாத காரணத்தால், பணம் செலுத்தப்பட்டுள்ளது என்று நான் தெரிவித்திருந்தேன். அவை

2019.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு, தாபனத்தின் வங்கிக் கணக்கின் வங்கி மீதியானது, அன்றைய தினம் மேலதிகப் பற்று வட்டியை செலுத்துவதற்கான மீதி இல்லை என்பதைக் காட்டுகிறது, எனவே பண ஒழுங்குமுறை - 387 இன் படி வங்கியிலிருந்து மேலதிகப் பற்று வசதிகளை தாபனம் எடுக்கவில்லை என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. .

**(i) நிதிசார் ஒழுங்குவிதிகள் 103, 104**

• தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஊ) இன் தேவைப்பாடுகளின்படி;

I. தரம் குறைந்த சாலைகள் குறித்து நியமிக்கப்பட்ட குழுவின் விளக்கத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க இயக்குநர் குழுவிடம் விளக்கம் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

II. வாகன விபத்துக்கள் தொடர்பில் காப்புறுதி இழப்பீடுகளை பெற்றுக் கொள்வதற்காக செயற்படுவது போன்று எதிர்காலத்தில் நடத்தப்படும் ஆரம்ப விசாரணைகளின் அடிப்படையில் பொறுப்பான கூமொ.தா. ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

• தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஏ) இன் தேவைப்பாட்டின்படி;

(அ) சொத்து குத்தகை ஒப்பந்தங்கள் தொடர்பான பிழைகளை சரி செய்து, தயாரிக்கப்படும் அனைத்து குத்தகை ஒப்பந்தங்களும் நறைவுபெற்றுள்ளன.

(ஆ) செய்தித்தாள் விளம்பரங்களை வெளியிடும் பெறுகைகள் நடைமுறைகளின்படி தற்போது பயன்பாடற்ற நிலையில் உள்ள இடங்களை வாடகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) தலைமை அலுவலகத்தில் இடம் குறைந்த மதிப்பில் நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டாலும், குறிப்பிட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திட எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) குழுவின் பின்வரும் பரிந்துரைகளால் இழந்த வருமானம், சாலைகளின் தரம் குறைந்த சாலைகள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து வசூலிக்கப்படும்.

## 1.5. ஏனைய கணக்காய்வு அவதானங்கள்

(அ) தாபனம் 2014 ஆம் ஆண்டிலிருந்து முறையாக மதிப்பீட்டைச் செலுத்துகிறது மற்றும் 2008-2013 ஆம் ஆண்டிற்கான வரி மதிப்பீட்டனை செலுத்துமாறு கொழும்பு மாநகர சபைக்கு அறிவித்தலினை வெளியிட்டுள்ளது.தாபனம் அத்தகைய நிலுவைத் தொகையை செலுத்த வேண்டியதில்லை என்பதால், கொழும்பு மாநகர சபைக்கு எதிரர்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதுடன், 2008 - 2013 ஆம் ஆண்டுக்கான கூமொ.தா இடமிருந்து உரிய மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு முன்னர் மதிப்பீடானது கொழும்பு மாநகர சபையின் வளாகத்தினுள் உள்ள கூமொ.தா. இன் சொத்தின் படி கணக்கிட்டு தீர்வு செய்யப்படுதல் வேண்டுமென கொழும்பு மாநகர சபை தெரிவித்தது. மாநகர சபைக்குச் சொந்தமான ஆதனமானது உரிய வகையில் பொருத்தமான வீதத்தில் செலுத்துதல் வேண்டும். 2008 - 2013 ஆம் ஆண்டுக்கான உயர் தொகையை சதொச நிறுவனத்திடம் இருந்து மீளப்பெற மேன்முறையீட்டு நீதிமன்றம். மாநகர சபைக்கு சொந்தமான சொத்திற்கு விகிதாசார தொகையை முறையாக செலுத்த வேண்டும். கொழும்பு மாநகர சபை அந்தத் தகவலை இன்னும் முறையாகச் சமர்ப்பிக்கவில்லை. அந்த வழக்கு தொடர்பான வழக்கு உத்தரவை (இணைப்பு - 15) கணக்காய்வுக்கு அனுப்புகிறேன்.

(ஆ) இந்தக் கணக்கு 2012 ஆம் ஆண்டிலிருந்து பேரேட்டு கணக்குகளில் பேணப்பட்டு வருகின்றது, மேலும், நிறுவனத்தின் சொத்துக்களை வாங்கும் குத்தகைதாரர்களால் மீளளிக்கப்படும் என்ற அடிப்படையில் செலுத்தப்பட்ட வைப்புத் தொகைகள் இதில் கணக்குகளில் சேர்க்கப்படுகின்றன. இது நிறுவனத்திற்கு ஒரு பொறுப்பாக இருப்பதுடன் இது ஒரு கடன் மீதி ஆகும். எவ்வாறாயினும், இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை சேமிப்பதற்காக நிறுவனத்தால் செலுத்தப்பட்ட ரூபா.6,975,000.00 இந்த கணக்கில் தவறுதலாகப் பற்று வைக்கப்பட்டுள்ளதுடன் இந்தக் கணக்கின் இறுதி மீதி ஒரு வரவு பெறுமதியினைக் காட்டுகிறது. இந்த பிழையானது 2019 இல் சரி செய்யப்பட்டதால், இந்த கணக்கு மீண்டும் நிறுவனத்தால் வைத்திருக்கும் பெறுமதியின் செலவு மீதியினைக் காட்டுகிறது, இது வழங்குனர்களுக்குத் மீளவும் வழங்கப்படும். குத்தகைதாரர்கள்

நிறுவனத்திற்கச் செலுத்திய மீள்ளிக்கத்தக்க வைப்புத்தொகை தொடர்பான ஆவணங்களை கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பி வைக்கின்றேன்.. 2019.12.31 ஆம் திகதியலுள்ளவாறு மீளளிக்கத்தக்க வாடகை வைப்புக் கணக்கில் உள்ள தொகை ரூபா. 2,748,670/-. ஆகும். நான் இதன் மூலம் கணக்காய்வுக்குத் தகவலை அனுப்பி வைக்கின்றேன்.

(இ) வாடகை நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குத்தகைதாரர்கள் உரிய திகதிக்கு முன்னர் வாடகையை செலுத்தவில்லை என்றாலும், பின்னர் அவற்றினை அறவீடு செய்தற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வாடகை தொடர்பாக இந்த பேரேட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ள முறையினை ஆராய 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் எந்த மூல ஆவணமோ அல்லது தாபனத்தின் மூலப் பேரேடு இல்லை என்பதால், இத்தகைய மீதிகளினை அறவீடு செய்வதற்கு எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாதுள்ளது. இந்த நீண்டகால நிலுவைகளுக்கான பணத்தினை அறவீடு செய்வதற்கான சாத்தியம் குறைவாக உள்ளமையால், கணக்கீட்டு நியம இல.36 இல் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி இழப்பீட்டுக்கான ஏற்பாடுக்ள மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **கூ.மொ.தா. நிருமாண மற்றும் பொறியியல் லிமிடெட்:**
  ஒவ்வொன்றும். ரூபா 100/- என்ற வீதத்தில் 2019 ஜனவரி மாதத்திற்காக 1929 சதுர அடிக்கு சேவை பிரிவினால் ரூபா.192,000.00 பெறுமதியான விலைப்பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன. கணக்காய்வு பிரிவுக்கு இந்த விலைப்பட்டியல் தொடர்பான அதிகரித்த 734 சதுர அடி தொடர்பான தகவல்களை வழங்குமாறு சேவைப் பிரிவு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- **சதோசா பாதுகாப்பு சேவைகள பொது லிமிடெட்.**
  2019 ஜனவரியிலிருந்து ஏப்பிரல் வரை, 2726 சதுர அடி தலா ரூ .160/- க்கு விலையிடப்பட்டுள்ளது. விலைப்பட்டியலிடப்பட்ட மாத வாடகை ரூபா.436,160/- ஆகும்.
  விலை அதிகரிப்பு தொடர்பான தகவல்கள் சேவை பிரிவினால் கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- **இடம்பெயர்ந்தவர்களின் மறுவாழ்வு கருத்திட்ட அலகு**

  ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான 06 மாதங்களுக்கு மாதத்திற்கு ரூபா.102/- வீதம் 2040 சதுர அடிகளுக்கு ஜனவரி முதல் ஜூன் வரை 12,240 சதுர அடிகளுக்கும் விலையிடப்பட்டுள்ளன. ரூபா. 102/- விலைக்குத் தேவையான தகவல்கள் சேவை பிரிவால் கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- **மக்ஸீஸ் லிமிட்டட்**

ஜனவரி மற்றும் பிப்ரவரி 2019 இல் ரூபா. 24,570/- பெறுமதியில் 245.70 சதுர அடி அளவு ஒரு அடிக்கு ரூபா.100/- என விலைப்பட்டியல் செய்யப்பட்டுள்ளது. தொடர்புடைய தகவல்கள் சேவை பிரிவால் கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**லங்கா சதொச லிமிட்டட்.**

லங்கா சதோசாவின் வாடகை முறைமை குறித்த தகவல்கள் சேவை பிரிவால் கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- **திரு.ஆரி வீரசிங்க**

2014 மே மாதத்தில் SL/REN/0245 மற்றும் SL/REN/0244 என ரூபா.45,470/- மொத்தப் பெறுமதியில் மாதமொன்றுக்கு ரூபா.70/-- என்ற வீதத்தில் 205 சதுர அடி அளவுக்கு விலைப்பட்டியலிடப்பட்டுள்ளது. மாதத்திற்கு மொத்த மதிப்பில் ரூ. மே 2014 மாதத்தில் 45,780/- SL/REN/0245 மற்றும் SL/REN/0244 என. தொடர்புடைய தகவல்கள் சேவை பிரிவால் கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

- **பெனடிக்ஸ் குறோசறீஸ் லிமிட்டட்**

2019, ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் 2019 மாதங்களில் 6400 சதுர அடி அளவு ஒவ்வொன்றும் ரூபா.367,840/ விலைப் பெறுமதியில் மாதமொன்றிற்கு ரூபா.57.48 க்கு விலைப்பட்டியலிடப்பட்டுள்ளது, இது தொடர்பாக, தொடர்புடைய தகவல்கள் கணக்காய்வுப் பிரிவுக்கு சேவை பிரிவினால் சமர்ப்பிக்கப்படுகின்றன.

(உ) பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல்களின்படி குழுவொன்று நியமிக்கப்பட்டு, அவர்கள் இந்த நிலுவைகளை தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒப்பிட்டு அவற்றை அறவீடு செய்வார்கள்.

(ஊ) தற்போது கணக்கியலுக்குப் பயன்படுத்தப்படும் நெருக்கடி முறைமையில் 2011 ஆம் ஆண்டிலிருந்து பேரேட்டு கணக்கு நிலுவைகள் மட்டுமே உள்ளிடப்பட்டுள்ளதால், முந்தைய ஆண்டுகளின் பேரேட்டு கணக்குகளை சரிபார்க்க முடியாதுள்ளமையால், இந்த மீதி எவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ளது என்பதற்கு பதிலளிக்க திணைக்களத்திடம் போதுமான ஆதாரங்கள் இல்லை.

ஆகையால், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை அறவீடு செய்ய முடியாது என்பதால், கணக்கீட்டு நியம இல. 36 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, குறைபாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(எ) 2019.12.31 இலுள்ளவாறான நிலவரப்படி, இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனை மூலம் லங்கா சதொச நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட மீதி ரூபா.1,455,183,162.98 ஆகும். 2021 ஆம் ஆண்டில், ரூபா. 74,889,456.25 பெறப்பட்டது, மீதமுள்ள பணம் ரூபா. 25,000,000.00 மாதாந்த முறையில் 6 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வழங்கப்படுதல் வேண்டும் மற்றும் முதல் கட்டணம் 2022.01.09 ஆம் திகதியன்று செலுத்தப்பட்டது. 08.03.2014.03.08 ஆம் திகதியன்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஏ) கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்புகளைப் பெறுவதன் மூலம் ரூபா.118,011,334/- பெறுமதியான காசோலைகள் மற்றும் போலி வங்கி உத்தரவாதத்தை வழங்கியமை தொடர்பில் குற்றப்புலனாய்வு

திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், கோட்டை நீதவான் நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றில் சிவில் வழக்கொன்றும் நிலுவையில் உள்ளது.

(ஐ) காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய முடியாத நேரங்களும் உண்டு. இருப்பினும், எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகளைத் தவிர்க்க நான் ஒரு குறிப்பை முன்வைத்துள்ளேன்.

(ஒ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறிப்பிடப்பட்டு, எதிர்வரும் ஆண்டுகளில் இது தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளேன். அதன்படி, குறித்த குறுந்தகவல் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு, அதற்கான திட்டங்களை உள்ளடக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஓ) நான் ஏற்றுக் கொள்கிறேன். கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ நிறுவனமான சதொச நிருமாண மற்றும் பொறியியல் நிறுவனமானது 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களைத தயாரிப்பதிலும் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளை தயாரிப்பதிலும் ஒரு வருடம் தாமதித்துள்ளதாக எனக்குத் தெரிவித்துள்ளது. 2021 ஆம் ஆண்டிலிருந்து, நான் நிதிக் கூற்றுக்களை உரிய திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

(ஔ) அந்த ஆண்டில் வெற்றிடங்களாக காணப்படும் பதவிகளை நிரப்ப எந்தவித ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை, மேலும் அரசாங்க சுற்றறிக்கையின்படி, அனைத்து ஆட்சேர்ப்புகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. மேலும், 69 பதவியினர் நிறுவனத்தில் பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அனைத்து ஊழியர்களும் கருத்திட்டப் பணிகளுக்கும் அன்றாட நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

(க) இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை விற்பனை செய்ததாக டபிள்யூ.ஆர்.விஜிதா உள்ளிட்டோருக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது வாக்குமூலங்கள் எடுக்கப்பட்டுள்ளன. மற்றும் டபிள்யூ.ஆர். அரிசி விற்பனை மற்றும் பணம் பெறப்பட்டமை தொடர்பில் முழுமையான கணக்காய்வு செய்து கணக்காய்வு அறிக்கையை வழங்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விஜிதாவிடம் அறிவித்துள்ளதோடு, அதற்கமைய சுயாதீன கணக்காய்வு நடத்தப்பட்டு வருகின்றது.

(கா) நான் ஒப்புக்கொள்கிறேன். இந்த மீதி சரிபார்க்கப்பட்டது, இது தாபனத்தில் பௌதீக ரீதியாக இல்லாத மீதி, தாபனத்தின் மூலம் பெறப்பட்ட அனைத்து பற்றுச்சீட்டுக்களும் காசுக் கணக்கிற்கு மாற்றப்பட்டு, வங்கியின் போது அந்தக் கணக்கில் வரவு வைக்கப்படும். இந்தக் கணக்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து பேரேட்டில் பிரதிபலிப்பதுடன் 2015.12.31 ஆம் திகதியன்று நிலுவைத் தொகை ரூபா. 3,326,158.72 ஆகும். 2016 கணக்குகளைத் தயாரிக்கும் போது, ரூபா. 196,894.45 ஆனது அந்தக் கணக்கிலிருந்து முதன்மையான சில்லறை காசு மீதி மட்டுமே மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

2016.01.02 ஆம் திகதி கொமர்ஷல் வங்கியின் 701 ஆவது கணக்கில் கையிருப்பில் இருந்த சில்லறை காசேட்டு நிலுவையானது வைப்பு செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டுக்கான சிறு பண முற்பணம் செலுத்தப்பட்டது. அதன்படி, மீதமுள்ள பணக் கணக்கு இருப்பு ரூ.3,129,264.27 ஆகும். இந்த பண ஏற்பாடுகள் செய்யப்பட்டன மற்றும் விவரங்கள்

பத்திரிகை உள்ளீடுகளில் உள்ளிடப்படவில்லை என்பதுடன் உள்ளீடுகள் அப்போதைய நிதித் தலைவரால் கணக்கிடப்பட்டதால், கூடுதல் தகவல்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, 2016 முதல், இந்த மீதித் தொகையானது தனித்தனி கணக்குகளில் காட்டப்பட்டு, பேரேட்டிலிருந்து கையில் இருந்த பணம் நீக்கப்பட்டது.

(கி) 1978 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபன திருத்தச் சட்டத்தின்படி, கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளை தாபனமானது ஒழுங்கமைத்தல் வேண்டும். ஆனால் 2019 ஆம் ஆண்டில் புதிய வர்த்தக திட்டங்கள் எதையும் தாபனம் மேற்கொள்ளவில்லை, மேலும், அரசு வழங்கிய அறிவுறுத்தல்களின்படி வர்த்தக திட்டங்களின் விற்பனை மற்றும் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தாபனத்திற்கு திட்டங்களை வழங்குவதற்கான வாய்ப்பு குறித்து உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளேன்..

(கீ) 2019.12.31 இலுள்ளவாறு, நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்ட பண்டகசாலைகளின் வாடகையாக மேற்படி நிறுவனத்திடம் இருந்து பெற வேண்டிய தொகை ரூபா.92,189,698.88 ஆகும். 2019 செப்டெம்பர் மாதத்தின் பின்னர், நெல் சந்தைப்படுத்தல் சபையானது சதொச களஞ்சியசாலைகளை கையளித்துள்ளது. இது தொடர்பான அனைத்து ஆவணங்களும் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு நிலுவைகளினை தீர்ப்பனவு செய்யும் நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன.

2019.12.31 இலுள்ளவாறு லங்கா சதொச நிறுவனத்திடம் இருந்து செலுத்த வேண்டிய தொகை ரூபா. 2,479,639,196.86 ஆகும்.. இந்த நிலுவைகளில், 2017ல் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி திட்டத்திற்கு ரூபா. 1,455,183,162.98 தொகையில் 2021 இல் இல் ரூபா. 74,889,456.25 தொகையானது மேற்படி நிறுவனத்தால் தாபனத்துக்கு செலுத்தப்பட்டுள்ளது. 2017 உள்ளூர் அரிசி திட்டத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா.305,519,573.45 தொகையில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மேற்படி நிறுவனத்தால் 185,573,213.07 தொகை தாபனத்துக்கு செலுத்தப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மற்றும் உள்ளூர் அரிசி விற்பனைக்காக செலுத்த வேண்டிய எஞ்சிய தொகையை செலுத்தும் திட்டத்தை லங்கா சதொச முன்மொழிந்துள்ளது. 2022.08.03 ஆம் திகதியன்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில், லங்கா சதொச நிறுவனம் 2022 செப்டெம்பர் 01 ஆம் திகதியிலிருந்து 06 வருடங்களுக்கு சதொச நிறுவனத்திற்கு மாதாந்தம் ரூபா 25,000,000.00 இனைச் செலுத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

2017-2018 ஆம் ஆண்டு நெல் கொள்வனவுக்காக சதொச நிறுவனம் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 721,544,504.61 ஆகும். சதொசவில் இருந்து 2022.09.01 இலிருந்து சதொசவுக்கு உள்ளூர் அரிசியை பெற்றுக் கொள்வதற்காக செலுத்த வேண்டிய பணத்தை லங்கா சதொச நிறுவனம் தவணை முறையில் செலுத்த சம்மதித்துள்ளதால், அந்த பணத்தில் இருந்து இந்தத் தொகையைச் செலுத்துவதற்கு உத்தேசித்துள்ளேன்.

லங்கா சதொசவுக்கு செலுத்த வேண்டிய ரூபா. 1,000,666,192.00 தொகையில், 2017ஆம் ஆண்டு லங்கா சதொச நிறுவனத்திடம் இருந்து வர்த்தகப் பொருட்களை கொள்வனவு செய்ததற்காக செலுத்த வேண்டிய மீதித் தொகையாக ரூபா.11,997,139.80 ஆகவும், 2014 ஆம் ஆண்டு வர்த்தகப் பொருட்களைக் கொள்வனவு செய்தமைக்காக ரூபா.77,231,474.00 ஆகவும் உள்ளது. லங்கா சதொச நிறுவனத்தில் இருந்து சதொச நிறுவனத்திற்கு பெறப்படும் பணம் மேற்படி நிலுவையை விட அதிகமாக உள்ளதால், லங்கா சதொச நிறுவனத்தால் முன்வைக்கப்பட்ட கொடுப்பனவு திட்டத்தை கருத்தில் கொண்டு, மேற்படி தொகையை செலுத்தி மேலதிக பணிகளை மேற்கொள்ள எண்ணியுள்ளேன்.

அதன்படி, உரிய நிலுவைத் தொகையை வசூலிக்கவும், சீராக்கல்களை மேற்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகள் தாபனத்தினால் ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தங்கள் உண்மையுள்ள

**கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்**

**துசார திசாநாயக்க, சட்டத்தரணி**
**தலைவர்**